மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நோக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கான நிதிக்கு வழிவகை செய்ய முயற்சிக்கிறோம்.

மாவட்ட நூலக ஆணைக்குழு.

*2166. **திரு. என். பெரியசாமி :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சிதம்பரனார் மாவட்டத்தின் தலைநகரான தூத்துக்குடியில் மாவட்ட நூலக ஆணைக்குழு அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலக ஆணைக் குழு அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோவை பாரதியார் பல்கலைக் கழகம்.

*6165. **திரு. கே. ரமணி :**

மாண்புமிகு கல்வி அமைச்சர்கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை பாரதியார் பல்கலைக் கழகம் நிறுவ நிலம் கையகப்படுத்தியதால் நிலமிழந்த விவசாயக் குடும்பங்களுக்கு குடும்பத்தில் ஒருவருக்கு பல்கலைக் கழகத்தில் வேலை தருவதாக அரசு வாக்குறுதி கொடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு சார்பு நிறுவனங்களுக்காக நிலம் கையகப்படுத்தியதால் நிலம் இழந்த விவசாயக் குடும்பங்களுக்கு குடும்பத்தில் ஒருவருக்கு அந்நிறுவனங்களில் வேலை வாய்ப்பு அளிக்க தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அரசாணை எண் 656, நாள் 29–6–1978 இல் ஆணை இடப்பட்டுள்ளது.